கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

ஐப்பசி மாத இதழ்
NEWS BULLETIN
OCTOBER 2023

ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்கள் நடைபெற்று வருகின்றன. பாடசாலையின் முகவரி: Clifford House, 38-44, Binley Road, Coventry CV3 1JA.

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm





அறியாமை என்னும் இருள் அகற்றி ஞான ஒளி தரும் நவராத்திரி விழா

தீமைகளை அழித்து நன்மைகளை அருளிய நவராத்திரி விழா. நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள் கூறலாம். இந்து சமயத்தைப் பின்பற்றுகின்ற மக்கள் விரதம் அனுட்டித்து விழாவாகக் கொண்டாடி வருகின்றனர். உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் சமயங் கடந்து நவராத்திரியைப் பண்டிகை போல் வெகு விமரிசையாகவும், மிக மகிழ்ச்சியாகவும் கொண்டாடுகிறார்கள்.

சர்வம், சக்திமயமான அம்பிகையை வழிபடக்கூடிய உன்னதமான விழா. மகிஷாசுரன் என்ற அசுரனுக்கு தேவர்களை அடிமைப்படுத்தும் விபரீத ஆசை ஏற்பட்டது. படைக்கும் கடவுளான பிரம்மாவை நோக்கி கடுந்தவம் செய்தான். பிரம்மன் மனம் நெகிழ்ந்து அருள் பாலிக்க அசுரன் முன் தோன்றினார். சாகாவரம் வேண்டும் என்று அசுரன் கேட்டதும், படைக்கும் தொழிலில் அது சாத்தியமில்லை பிறப்பவன் இறப்பதும், இறப்பவன் பிறப்பதும் தான் காலச்சக்கரத்தின் சுழற்சி. கேட்கும் வரத்தை மாற்றிக் கேள் என்று பிரமா கூற, அசுரன் கர்வத்தால் தீர யோசிக்க மறந்தான். தேவர்களை வென்றுவிட்டால், எல்லோரும் தனக்கு அடிமையாகி விடுவார்கள் என்ற மமதையில், தனது சாவு ஒரு பெண்ணால்தான் ஏற்படவேண்டும் என்று வேண்டினான்.

வரம் கிடைத்தவுடன் மகிஷனின் அட்டகாசம் மூவுலகிலும் தலைதூக்கியது. தர்மம் அழிந்தது. மக்கள் அவலநிலைக்கு ஆளாகித் துன்புற்றனர். தேவர்களும் ஈசனை வேண்டினர். தனது நெற்றிக்கண்ணைத் திறந்து, சர்வசக்தியாம் துர்க்கா தேவியைத் தோற்றுவித்தார்.



அசுரர்களை அழிக்க அன்னை பராசக்தி அவதரித்ததும், தேவர்கள் ஆயுதங்களைத் தேவியிடம் கையளித்து, பராசக்தி அசுரர்களுடன் போரிட்டபோது, பொம்மைகள் மாதிரி நின்றதைக் காட்டுவதே பொம்மைக் கொலு வைப்பதாக ஐதீகம். ஆதிபராசக்தி ஒன்பது நாட்கள் அசுரனுடன் போரிட்டு மகிஷனை வதம் (துவம்ஷம்) செய்தாள். அதர்மம் அழிந்ததைக் கண்ட தேவர்கள் தேவிக்கு மலர்மாரி பொழிந்தனர். சக்தியாக வந்த அம்பாள் மக்களைக் காத்து ஜெயம் பெற்றதால், நவராத்திரி விழாவை ஒன்பது நாட்கள் கொண்டாடுகின்றோம்.

பத்தாவது நாள் விஜயதசமி எனவும் அனுஷ்டிக்கப்படுகிறது.

முதல் மூன்று தினங்களும் வீரத்தை வேண்டித் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி மகாலஷ்மியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் ஆண்டுதோறும் வழிபட்டு வருகின்றோம். நவராத்திரி முப்பெரும் தேவிகளின் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை மக்களுக்கு உணர்த்துகின்றது. மக்கள் வாழ்வில் அறியாமை நீங்கி துன்பங்கள் விலகி ஒளிமயமான எதிர்காலம் அமையும் என்ற நம்பிக்கை உருவாகின்றது. வீடுகளிலும், ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் ஒன்றாகக் கூடி நவராத்திரியின் சக்திகள் மூலம் எமது இளையோரின் வாழ்வில் கல்வி, செல்வம், வீரம் ஆகிய முக்கனிகளைப் பெற முப்பெரும் தேவிகளையும் வணங்குவோம். உலகில் தீமையை அழித்து நன்மையை அருளிய முப்பெரும் தேவிகளின் சக்திகளைப் பெற்று நலமே வாழ்வோம்.

நன்றி

திருமதி அனற் செபமலர்.
தமிழாசிரியை.

தமிழ்ப் பாடசாலையின் நவராத்திரி விழா

தமிழ்ப் பாடசாலையின் நவராத்திரி விழா 21/10/23 அன்று சிறப்பாக நடைபெற்றது. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வெளிவிவகார இணைப்பாளர் திரு பிரசாத் கணேசையா அவர்கள் பூசைநிகழ்வுகளை சிறப்பாக நடாத்தியிருந்தார்.



சகலகலாவல்லி மாலையை கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான 'நுண்கலைமானி' ஸ்ரீமதி வானதி சுரேஷ்குமார் அவர்கள் பாடியிருந்தார்.



அதைத் தொடர்ந்து, கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. பரதநாட்டிய ஆசிரியை, நுண்கலைமானி' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஜெனிஷ்கா சிவா, செல்வி வைஷாலி காண்டீபன் ஆகியோரும், செல்வி ஜனுஜா அகிலன், செல்வி மாதுகை மயூரன், செல்வி அகஸ்ரா றோபேட் ஆகியோரும் நடனத்தை வழங்கியிருந்தனர்.





வயலின், வீணை ஆசிரியை 'கலாஜோதி' செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி வர்ஷிதா ஜெய்சங்கர் வயலின் இசையையும், செல்வி ஜெய்பிரகவி ஜெயகாந்தன் வீணை இசையினையும்



சுரத்தட்டு (Keyboard) ஆசிரியை 'கலாஜோதி' செல்வி ஸ்ரெ:பனி லோறன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் டிர்த்தீன் ஜெயதீஸ்வரன் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர். நிகழ்வினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவரும், தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.



நவராத்திரி விழாக்களில் நடன நிகழ்ச்சிகள்

கொவன்றீஸ்ரர் ஆலய நவராத்திரி விழாவில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியை 'பரதக்கலாவித்தகர்' 'கலைமானி' ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்வி தனிஷ்கா சிவா, செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன், செல்வி அர்ச்சனா ரமணன், செல்வி ஆரதி சியாமளன், செல்வி சஸ்மிதா பாஸ்கரன் ஆகிய மாணவிகளும், 'நுண்கலைமானி' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஜெனிஷ்கா சிவா, செல்வி வைஷாலி காண்டீபன், செல்வி இதயனி இதயகுமார், செல்வி ரிதன்யா மோகன், செல்வி அபினயா ரமணன், செல்வி ஆருஷி லோகநாதன், செல்வி இதயவேணி இதயகுமார், செல்வி இதயநிலா இதயகுமார், செல்வி ஜனுஜா அகிலன், செல்வி மாதுகை மயூரன், செல்வி அகஸ்ரா றோபேட் ஆகிய மாணவிகளும் இணைந்து நடனங்களை வழங்கியிருந்தனர்.







கொவன்றி சிறீபுரம் சிவமுத்துமாரியம்மன் ஆலய நவராத்திரி விழாவில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களில் ஒருவரான நுண்கலைமானி' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஜெனிஷ்கா சிவா, செல்வி வைஷாலி காண்டீபன், செல்வி இதயனி இதயகுமார் ஆகிய மாணவிகள் நடன நிகழ்வை வழங்கியிருந்தனர். நிகழ்வில் நடன ஆசிரியை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.






75th Anniversary of the Lions club for Ukraine people.

14/10/2023 அன்று நடைபெற்ற உக்ரைன் மக்களின் 75ஆவது Lions club கொண்டாட்டத்தில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம், கொவன்றிவாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நடன நிகழ்வை வழங்கியிருந்தமை மிகவும் பெருமைக்குரிய விடையம்.

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் நடன ஆசிரியர்களில் ஒருவரான 'நுண்கலைமானி' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஜெனிஷ்கா சிவா, செல்வி வைஷாலி காண்டீபன், செல்வி இதயனி இதயகுமார், செல்வி ரிதன்யா மோகன், செல்வி அபினயா ரமணன் ஆகியோர் அலாரிப்பு மற்றும் கீர்த்தனம் ஆகிய நடனங்களை வழங்கியிருந்தனர். சபையினர் மெய்மறந்து நடனத்தில் மூழ்கியிருப்பதையும் படத்தில் காணலாம்.







நான் விரும்பும் ஆசான்

அன்பில் தெய்வமாக
அறிவில் ஒளியாக
பண்பில் உயர்வாக
பாசத்தில் தாயாக
ஒழுக்கத்தில் சிறந்தவராக
கற்பித்தலில் குருவாக
கருணை உருவாக
பேச்சில் இனிமையாக
உயர்த்துவதில் ஏணியாக
கரைசேர்ப்பதில் தோணியாக
வாழ்வில் வழிகாட்டியாக
கலங்கரை விளக்காக
காப்பதில் அன்னையாக
அறியாமை இருள் நீக்கியே
அறிவொளி ஊட்டும் ஆசிரியராக
அமைந்தால் வெற்றி அடைவோமே...

கவிசன் மயூரன்
தரம் - 1

ஏழிசைக் குழுவின் கலைமாலை

29/10/2023 அன்று கோலாகலமாக நடைபெற்ற ஏழிசைக் குழுவின் கலைமாலை நிகழ்வில் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில், நிர்வாக உறுப்பினர்கள், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் சிரேஷ்ட உப தலைவரும், தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்கள் மங்கல விளக்கேற்றினார். அத்துடன் ஏழிசைக் குழுவினர் அவரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களில் ஒருவரான 'பரதக் கலாவித்தகர்' 'கலைமானி' ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்வி தனிஷ்கா சிவா, செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன், செல்வி அர்ச்சனா ரமணன், செல்வி ஆரதி சியாமளன், செல்வி ஜெனிஷ்கா சிவா ஆகியோர் அரங்கில் 'சிவ கீர்த்தனம்' நடனத்தை வழங்கியிருந்தனர். அதேநேரம் நடன ஆசிரியையும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில் கல்விகற்று, பல கலைப்பாடங்களில் டிப்ளமோ கற்கைநெறிகளை முடித்த பழைய மாணவிகளான 'கலாஜோதி' செல்வி கனகா சர்வானந்தலிங்கம், தற்போது அதே பாடசாலையில் கலைப்பாட ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 'கலாஜோதி' செல்வி வாரணி சரவணதாசன், 'கலாஜோதி' செல்வி ஸ்ரெ:பனி லோறன்ஸ் ஆகியோர் இணைந்து வயலின் இசையை வழங்கியிருந்தனர்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பழைய மாணவர்களான செல்வி பவதாரணி சிவாகரன், செல்வி சாருண்யா நேமிநாதன், மாணவர்களான செல்வி நேருஷா கேதீஸ்வரன், செல்வன் நீரஜன் பகீரதன் ஆகியோர் கொவன்றீஸ்வர ஆலய பிரதம சிவாச்சாரியார் 'வேதாகம வித்தகர்' சிவசிறீ சசிக்குமார குருக்கள் (ரூபன் ஐயா) அவர்களின் தலைமையில் நடைபெற்ற "நாங்கள் புலம்பெயர் தமிழர்களின் தலைமுறையா அல்லது தலைவிதியா" என்ற பட்டிமன்றத்தில் பங்கேற்றிருந்தனர்.

